**சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு, சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு**

**சபரகமுவ மாகாண அரச பணியின் சிறுவர் பராமரிப்பு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஆலோசகர் (கைத்தொழில்) ஜுக்கி தையல் தரம் III ற்கு ஆட்சேர்ப்பதற்கான**
**திறந்த போட்டிப் பரீட்சை 2024**

**1.0** 2019.10.28 திகதி தொடக்கம் அமுலாகும் வண்ணம் சபரகமுவ மாகாண கௌரவ ஆளுனரினால் அனுமதிக்கப்பட்ட சபரகமுவ மாகாண சிறுவர் பராமரிப்பு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத பிரிவு 2 சேவை **(MN-1 2016) ஆலோசகர் (கைத்தொழில்) ஜுக்கி தையல் தரம் IIIற்கு** ஆட்சேர்க்கும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2.0** இந்தப் பரீட்சை சபரகமுவ மாகாண சமூக நலன்புரி மற்றும் கிராமிய கைத்தொழில, அமைச்சின் செயலாளரால் நடத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப்படும். இந்த பரீட்சைப் பெறுபேற்றின் படி 1990.03.09ஆம் திகதியிடப்பட்ட அரச பரிபாலன சுற்றறிக்கை 15/90 ல் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களுக்கு அமைய, எழுத்து மற்றும் நடைமுறை பரீட்சையில் சித்தி பெறுவோர், பெற்ற மொத்த புள்ளிகளின் திறன்கள் வரிசைக்கிரமப்படி தகுதி பெறும் அபேட்சகர்கள் சபரகமுவ மாகாண அரச சேவையில் ஆலோசகர் (கைத்தொழில்) ஜுக்கி தையல் தரம் IIIற்கு தெரிவு செய்யப்படுவர்.

**3.0** இந்தக் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் முழுமையாக்கப்படும் பதவி **வெற்றிடங்கள் தொகை 1ஆகும்.** நியமனம் அமுலாகும் திகதி, நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலின்படி வெற்றிடங்களை நிரப்புவது, நிரப்பாமல் இருப்பது குறித்து இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரையே சாரும்.

**4.0 பதவிக்குரிய சம்பள அளவு**

இலக்கம் 3/ 2016 மற்றும் 2016/02/25 தேதி கொண்ட அரச பரிபாலன சுற்றறிக்கையின்படி, **ஆலோசகர் (கைத்தொழில்) ஜுக்கி தையல் தரம் IIIற்குரிய** சம்பளப் பிரிவு MN 1- 2016 ஆகின்ற அதே வேளை அதற்கான மாதாந்த சம்பள அளவு ரூபா. 27,140- 10 X 300 - 11 X 350 - 10 X 495 - 10 X 660 - ரூபா 45,540 ஆகும்.

**5.0 தகைமைகள்** : **சபரகமுவ மாகாண அரச சேவையில் ஆலோசகர் (கைத்தொழில்) ஜுக்கி தையல் தரம் III பதவிக்கு** ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்து இருத்தல்.

**அ) கல்வித்தகைமைகள்**

I.தாய்மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்), கணிதம் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

II. க.பொ.த (உ.த) பரீட்சையில் குறைந்தது ஒரு (01) பாடத்திலேனும் (பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தி பெற்றிருத்தல்.

**ஆ) தொழில் தகைமை**

I. ஜுக்கி தையல் துறைக்கேற்ற தேசியத் தொழில் திறன் (NVQ -4) தேர்ச்சி பெற்றிருத்தல்.
அல்லது

II. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால்/ அரசின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்படும், தொழிலுக்கு ஏற்ற, இரண்டு வருட பயிற்சி நெறிச் சான்றிதழ்

பெற்றிருத்தல். (முதலாம் தடை தாண்டிப் பரீட்சைக்கு முன் (NVQ-4) தேர்ச்சி பெறல் வேண்டும்.)

**இ) அனுபவம்.**

ஏற்புடையதல்ல

**ஈ) உடலியல் தகுதிகள்**

ஒவ்வொரு அபேட்சகரும் சபரகமுவ மாகாணத்தினுள் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றவும் பதவியில் கடமையை நிறைவேற்றவும் போதுமான உடல் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**உ) வேறு தகமைகள்**

I. விண்ணப்பதாரர் இலங்கை பிரஜையாய் இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பம் கோரும் தினத்தன்று விண்ணப்பதாரர் சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக வேண்டிய அதே வேளை விண்ணப்பம் கோரப்படும் திகதியை அண்மிக்கும் மூன்று வருடங்களில் சபரகமுவ மாகாணத்தில் மூன்று வருடம் வசிக்காவிடில் தனது கணவர் அல்லது மனைவி மூன்று வருடம் வசித்து இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரர் சிறந்த சரிதையை உடையவராகவும் உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

IV. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வர்த்தமானி அறிவித்தலின்படி உரிய தினத்தில் கோரப்படும் அனைத்துத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**ஊ) வயதெல்லை**

விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**எ) ஆட்சேர்ப்பு முறைமை**

எழுத்து மற்றும் தொழில் பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும். எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் மட்டும் தொழில் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்து மற்றும் தொழில் பரீட்சைகள் இரண்டிலும் சித்தி எய்தியவர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகையில், அதிகூடிய புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரர்களின் திறன் வரிசைப்படி ஆட்சேர்ப்பு இடம்பெறும். அரச நிர்வாகச் சுற்றறிக்கை 15/90ல் குறித்த பிரமாணங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**6.0) பரீட்சை முறைமை**

**அ) எழுத்துப் பரீட்சை**

இந்த எழுத்துப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் மட்டும் நடத்தப்படும். விண்ணப்பதாரர்கள் விரும்பிய மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம்.எனினும் விண்ணப்பித்த பிறகு மொழியை மாற்றம் செய்ய முடியாது. இப் பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களை உடையது. வினாத்தாள்களில் சித்தி பெறுவதற்கு, குறைந்தது ஒரு வினாத்தாளில் 40 புள்ளிகள் பெற வேண்டும்.

| பாடம் | புள்ளி | காலம் |
|---|---|---|
| 1) பொது அறிவு | 100 | 1 மணி |
| 2) விடய அறிவு. | 100 | 2 மணி |

மேற்படி பாடங்கட்குரிய பாடவிதானம் பின்வருமாறு

| **வினாத்தாளின் பெயர்** | **பாடவிதானம்** |
| --- | --- |
| 01. பொது அறிவு. | இலங்கையிலும் சர்வதேச அளவிலும் தற்கால சமூக, அரசியல், பொருளாதாரம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தித் தயாரிக்கப்பட்ட வினாத்தாள். |
| 2. தொழில் பற்றிய அறிவு.<br>ஜுக்கி தையல் பயிற்சி தொடர்பான அறிவு. | • ஜுக்கி மெஷின் ஒன்றின் பொதுவான இயக்கமும் அதன் பாவனையும் பற்றிய பொது அறிவு.<br>• தனி ஊசி lock stitch தையல் இயந்திரம் பற்றிய அறிவு.<br>• தனி ஊசி lock stitch தையல் இயந்திரப் பாவனையின் அடிப்படைத் தையல் தொடர்பான அறிவு.<br>• தனி ஊசி lock stitch தையல் இயந்திரத்தைப் பாவித்து விசேட வேலைகளைச் செய்தல் பற்றிய அறிவு.<br>• ஆடை overlock செய்தல் பற்றிய அறிவு.<br>• Safety stitch over lock தையல் இயந்திரத்தை இயக்குவதற்கு தயார் செய்தல் தொடர்பான அறிவு.<br>• இரட்டை ஊசிகள் கொண்ட தையல் இயந்திரத்தை இயக்குதல் தொடர்பான அறிவு.<br>• ஆடை தைத்தலின் போது zigzag தையல் இயந்திரம் இயக்குவது தொடர்பான அறிவு.<br>• Flat lock தையல் இயந்திரத்தை இயக்குவது தொடர்பான அறிவு. |

**ஆ) நடைமுறைத் தொழில் பரீட்சை**

| | **பாடம்** | **புள்ளி** | **காலம்** |
| --- | --- | --- | --- |
| 1) | ஜுக்கி தையல் பயிற்சி பற்றிய அறிவு | 100 | 2 மணி |

| **வினாத்தாளின் பெயர்** | **பாடவிதானம்** |
| --- | --- |
| ஜுக்கி தையல் பயிற்சி பற்றிய அறிவு | • தனி ஊசி lock switch தையல் இயந்திரத்தை தையலுக்குத் தயாராக்குதல்.<br>• தனி ஊசி lock switch தையல் இயந்திரத்தைப் பாவித்து அடிப்படைத் தையலைத் தைத்தல்.<br>• ஆடை overlock செய்தல். |

| | |
|---|---|
| | • 2 ஊசிகளுடன் கூடிய தையல் இயந்திரத்தை இயக்குதல்.<br>• ஆடைத் தைத்தலின் போது தையல் இயந்திரத்தை இயக்குதல்.<br>• Flat lock தையல் இயந்திரத்தை இயக்குதல். |

தொழில்ப் பரீட்சையில் சித்தி எய்த 40 புள்ளிகள் எடுக்க வேண்டும்.

இ). பொது நேர்முகத் தேர்வு

எழுத்து மற்றும் தொழிற்பயிற்சியில் சித்தி எய்தியவர்களின் தகைமையைச் சோதிக்கப் பொது நேர்முகத்தேர்வு ஒன்றுக்கு அழைக்கப்படுவர். அதற்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**7.0. பரீட்சைக் கட்டணம்**

பரீட்சை கட்டணம் 600/- ஆகும். சபரகமுவ மாகாண சபையின் எந்த ஒரு அமைச்சுக்கும் திணைக்களத்துக்கும் (உள்ளூராட்சி நிறுவனங்களைத் தவிர) அல்லது சபரகமுவ மாகாணத்துக்கு உட்பட்ட எந்தப் பிரதேச செயலகத்திற்கும் இக்கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட ரசீதை கழற்ற முடியாத வண்ணம் விண்ணப்பத்தின் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். இப் பரீட்சை கட்டணத்தைச் சபரகமுவ மாகாண சபையின் வருமானத் தலைப்பு 20.03.02.99 எனும் இலக்கத்திற்கே செலுத்த வேண்டும்.

செலுத்தப்படுகின்ற பரீட்சை கட்டணம் எந்த ஒரு காரணத்தினாலும் மீளச்செலுத்தப்பட மாட்டாது. காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணத்திற்கான ரசீதின் போட்டோ பிரதியைத் தன்னுடன் வைத்திருத்தல் பயன் தரும்.

**8.0 விண்ணப்பம்**

A4 (21 cm. × 29 cm) அளவிலான கடதாசி ஒன்றின் இரு பக்கங்களையும் பாவித்து,

**(அ)** இலக்கம் 1 தொடக்கம் 4 வரை முதலாம் பக்கத்திலும்,

**(ஆ)** 5 தொடக்கம் ஏனையவைகள் ஏனைய பக்கங்களில் வரும் வண்ணம் தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பத்தை உருவாக்கிக் கொண்டு, விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியில் தன் கையெழுத்திலேயே விண்ணப்பத்தைத் தயாரித்துப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

உரிய மாதிரிப் படிவத்தின்படி இல்லாத, குறித்த தினத்துக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தாத, தகுதி வாய்ந்த தகைமைகளை மற்றும் கல்வித்தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, சரியாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முழுமை பெறாத விண்ணப்பங்கள், எதுவித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். கொடுக்கப்பட்ட ஆலோசனைக்கமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக எதுவித பொறுப்பும் கூறப்பட மாட்டாது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் போட்டோ பிரதியொன்றை தன்னிடம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும்.

8.1 இந்த அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கின்றார்கள் என ஊகித்து, உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன் விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் போட்டி பரீட்சை ஒன்றிற்குத் தோற்றுவதற்கு, சபரகமுவ மாகாண ,சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு அனுமதி தரும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வழங்கப்படும் அனுமதிப்பத்திரம், விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்குத் தகைமை பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக அமையாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்ற அழைக்கப்பட்டு, ஆட்சேர்க்கப்படும் அறிவித்தலின்படி தகைமைகள் உண்டா என்பதைப் பரீட்சிக்கும் வேளையில், தேவையான தகைமைகள் இல்லை என்பது தெரிய வருமானால் அவர்களின் பரீசை அபேட்சகத்தன்மை நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில், பரீட்சை மேற்பார்வையாளரிடம் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்தல் வேண்டும்.

8.2 விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது ஒரு நிறுவனத்தில் பணி புரியும் விண்ணப்பதாரர், தனது கையொப்பத்தை, அந்த நிறுவனத்தின் பிரதம அதிகாரி அல்லது அவரால் நியமிக்கப்படும் அதிகாரி, அவ்வாறில்லாத விண்ணப்பதாரரின் கையொப்பம் அரச பிரதம அதிகாரி, ஓய்வு பெற்ற அரச அதிகாரி, கிராம சேவகர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், முப்படை அதிகாரி, அரச/ மாகாண அரச சேவையில் நிரந்தர நிர்வாக சேவை அதிகாரி அல்லது மதகுரு ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.3 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2024.08.30 திகதிக்கு அல்லது அதற்கு முன் **செயலாளர், சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு, சபரகமுவ மாகாண சபை, புதிய நகர், இரத்தினபுரி** என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

8.4 கடித உறையின் இடது பக்க மேல் பகுதியில் **சபரகமுவ மாகாண அரச சேவையின் ஆலோசகர் (கைத்தொழில்) ஜுக்கி தையல் III ஆம் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2024** என்பதைக் குறிப்பிடுங்கள்.

**9.0** விண்ணப்பதாரரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த, கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

i. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆள் அடையாள அட்டை.
ii. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு .
iii. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

**10.0 போலியான தகவல்களுக்கான தண்டனை**

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தும் போது மிகுந்த அக்கறையுடன் பூரணப்படுத்த வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்கட்கு அமைய, விண்ணப்பதாரர் ஒருவர், தகுதியற்றவர் என்பது தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன் அல்லது பரிட்சையின் போது அல்லது பரீட்சையின் பின் அல்லது எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரரால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானது எனத் தெரியவரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

**11.0** இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் இருக்குமாயின் அது பற்றி சபரகமுவ மாகாண, சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சினது செயலாளரின் தீர்மானம், இறுதித் தீர்மானமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் பொதுவான பரீட்சைச் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும்.

தினீஷா எஸ்.ரத்நாயக்க,

செயலாளர்,

சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு,
கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு,

சபரகமுவ மாகாணம்.

2024 ஆடி மாதம் 11 திகதி.